செய்தி வெளியீடு எண்: 533 நாள்: 26.8.2009

பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசு, போக்குவரத்து துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தையும் விரைவாகப் பூர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது காலியாக இருந்த இளநிலை உதவியாளர் நிலையில் 65 பணியிடங்களும், தட்டச்சர் நிலையில் 104 பணியிடங்களும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலையில் 6 பணியிடங்களும், தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தற்போது பணியமர்த்தப்பட்டு பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2. கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி அளிக்கப்பட்ட விண்ணப்பங்களில் துரிதமாக நடவடிக்கை எடுத்து நியமன உத்திரவுகள் வழங்கப்பட்டு வருகிறது. கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்க அரசு உத்தரவு பிறப்பித்த நாள். 06/07/2006 முதல் இன்று வரை 29 இளநிலை உதவியாளர்களும், 4 அலுவலக உதவியாளர்களும், மற்றும் 1 துப்புரவு பணியாளரும், ஆக மொத்தம் 34 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

3. இதன் அடிப்படையில் இத்துறையில் இளநிலை உதவியாளர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 8 பணியிடங்களில் இன்று (26/08/2009) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் 6 இளநிலை உதவியாளர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது. இக்நிகழ்ச்சில் போக்குவரத்து துறை செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., போக்குவரத்து துறை ஆணையர் திரு. எ. மக்பூல் சந்திரகாதன் இ.ஆ.ப மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9